## கொளத்தூர் – திரு.வி.க. நகர் தொகுதிகளில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் - பல்லாயிரவர்க்கு நல உதவிகள் வழங்கி - பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற எழில்மிகு காட்சிகள்!



பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நேற்று (14.3.2026) அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் 8–ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு மாணவ. மாணவியர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு மாணவியர்கள் உற்சாக வரவேற்பு அளித்து முதல்வர் அவர்களுடன் செல்பி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2026) திரு.வி.க. நகர் மண்டலம், ஓட்டேரி, செல்லப்பா தெருவில் 2 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தந்தை பெரியார் மாநகர ஆரம்ப சுகாதார நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2026) பொம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் 8–ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு 5,000 மாணவ, மாணவியர்களுக்கு வீட்டு உபயோகப் பொருட்களை வழங்கினார். அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர். கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், வெற்றிஅழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் பரங்கநாதன், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர்/இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா, அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாகிகள் நரேந்திரன், திருமதி ஹெலன், டான் பாஸ்கோ பள்ளி தாளாளர் அருட்தந்தை லியோ, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2026) கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையிலுள்ள எவர்வின் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 4,444 கழக நிர்வாகிகளுக்கு தோல் பை, நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா ஆகியவற்றை வழங்கினார்.



முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2026) பெரம்பூர், டான் பாஸ்கோ பள்ளி வளாகத்தில் தமிழ்நாடு அரசின் ஐந்தாண்டு சாதனைகளை விளக்கிடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2026) கொளத்தூர், ஜி.கே.எம். காலனியில் உள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.3.2026) கொளத்தூர், பேப்பர் மில்ஸ் சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 7 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார்.